(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 65.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

2011, சனவரி 04, செவ்வாய்க்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0042/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசுக்குச் சொந்தமான பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையையும்,

(ii) மாகாணம், மாவட்டம், தேர்தல் தொகுதி ஆகியவற்றைக் குறிப்பிடப்பட்டு அப்பல்கலைக்கழகங்களின் அமைவிடங்களையும்,

(iii) இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்கள் செயற்படுகின்றனவா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், அவற்றின் பெயர்கள் மற்றும் அவை ஒவ்வொனறிலும் பதிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கையையும்,

(v) அவை உள்ளூர் பட்டங்களையா அல்லது வெளிநாட்டுப் பட்டங்களையா வழங்குகின்றன என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் கடந்த 6 வருடங்களுக்கான கல்வி நாட்கள் எத்தனை என்பதையும்,

(ii) கடந்த 6 வருடங்களில், வகுப்பு பகிஸ்கரிப்பு எதுவும் இன்றி தொழிற்பட்டிருந்தால், அவ்வாறு நடைபெற்ற நாட்களுடனான வருடவாரியான மேலே (i) இல் குறிப்பிட்டவாறு ஒரு ஒப்பீட்டையும்,

(iii) ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் கடந்த 5 வருடங்களுக்கான பொதுவான மாணவர் வரவை வருட அடிப்படையில் எவ்வளவு என்பதையும்

பீடங்கள் அடிப்படையில் அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) கடுமையான பகிடிவதைகளை கொடுத்ததாக அறிவிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) கடந்த இரண்டு வருடங்களில் இது தொடர்பாக நீதிமன்றத்தில் விசாரணை செய்து முடிவடைந்த மற்றும் எதிர்காலத்தில் விசாரிக்கப்படவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0342/ ‘10

2.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) ‘ஜி.எஸ்.பி.ப்ளஸ்’ சலுகையின் கீழ் எமது நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் உற்பத்தி வகைகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி உற்பத்திகள் ஏற்பறுமதி செய்யப்படும் நாடுகள் யாவையென்பதையும்,

(iii) உற்பத்திகளை அனுப்பும் போது வழங்கப்பட்ட வரிச்சலுகை எவ்வளவென்பதையும்,

(iv) இச்சலுகை நீக்கப்பட்டால் இழக்கப்படு தொழில்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(v) இக்காரணத்தால் இழக்கப்படும் தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அரசு அந்நிய செலாவணிக்காக எடுக்கும் நடவடிக்கைகள் என்னவென்பதையும்,

(ii) ஜி.எஸ்.பி.ப்ளஸ் சலுகையை தாரத ஐரோப்பிய நாடுகளுக்கு உற்பத்திகளை அனுப்பும் போது ஏற்படும் நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0495/ ‘10

3.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட பாலர் பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இந்தப் பாலர் பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு ஒரு வேளை உணவை வழங்கவும், கற்பித்தலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் கொடுப்பனவு ஒன்றைச் செய்யவும் தற்போதைய அரசு நடவடிக்கை மேற்கொள்கின்றதா என்பதையும்,

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0531/ ’10

4.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், அக்கரைப்பற்று - மட்டக்களப்பு - திருக்கொண்டுயாடுமடு வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதியையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல் , வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0566/ '10

5.

கௌரவ புத்திக பத்திரண,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியினால் பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட இலங்கை மனிதவள அபிவிருத்தி வங்கிச் சங்கத்தின் அனைத்துக் கிளைகளும் தற்போது ஒழிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வங்கிக்கு உரியதாயிருந்த கிளைகள் எத்தனை என்பதையும்,

(ii) வைப்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் வைப்பிலிடப்பட்டிருந்த பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வைப்புத் தொகைகளை மீளளிப்பதற்காக 2007 ஆம் ஆண்டில் இடைக்காலக் குழுவொன்று நியமிக்கப்பட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், இந்த இடைக்காலக் குழுவின் பெறுபேறுகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) குறிப்பிட்ட வங்கியில் வைப்பாளர்களுக்கு திருப்பிச் செலுத்த வேண்டிய முழுத் தொகை யாதென்பதையும்,

(ii) இத்தொகையை மீண்டும் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) இன்றேல், இத்தொகைகளை செலுத்தி முடிக்கும் இறுதித் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0643/ '10

6.

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வேலையற்ற அழகியற்கலைப் பட்டதாரிகளுக்கு தொழில்கள் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தற்போது தயாரிக்கப்பட்டிருக்கின்றதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வேலைத்திட்டத்தின் மூலம் தொழில்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் அழகியற் கலைப் பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நித எவ்வளவு என்பதையும்,

(iii) ஆட்சேர்ப்புக்கு ஏற்புடைய விளம்பரங்கள் வெளியிடப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்,

(iv) ஆமெனில், மேற்படி நேர்முகப் பரீட்சைகளில் பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(v) இவர்களில் தொழில்கள் வழங்கப்படுவோரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(vi) மேற்படி ஆட்சேர்ப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் மற்றும் நிறைவுபெறும் திகதிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0758/ '10

7.

கௌரவ வசந்த அலுவிஹாரே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை பொது வைத்தியசாலையின் புதிய சத்திர சிகிச்சைத் தொகுதியின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு, வைத்தியசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) இப்புதிய சத்திர சிகிச்சைத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியும் பூர்த்தி செய்யப்பட்ட திகதியும் யாவையென்பதையும்,

(iii) மேற்படி சத்திர சிகிச்சைத் தொகுதியின் நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின், அதனைத் திறந்து வைத்தல் இதுவரையில் தாமதிக்கப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(iv) இப்புதிய கட்டிடத்தினை விரைவில் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(v) அவ்வாறாயின், அது திறந்து வைக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இப்புதிய சத்திர சிகிச்சைத் தொகுதியினை நிர்மாணிப்பதற்காகவும் வளிச்சீராக்கி மற்றும் ஏனைய அடிப்படை உபகரணங்களைப் பொருத்துவதற்காகவும் செலவிடப்பட்ட பணத்தொகையினை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0761/ '10

8.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம் VOIP சர்வதேச தொலைபேசிச் சேவைகள் தொடர்பில் ரெலிகொம் ஏஷியா நிறுவனத்துடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளதா என்பதையும்,

(ii) இதற்கு ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் முன் அனுமதி கிடைத்ததா என்பதையும்,

(iii) இந்த உடன்படிக்கையை செய்துகொள்வதற்கு முன்னர் சர்வதேச தொலைபேசி அழைப்புகளுக்காக ஒரு நிமிடத்திற்கு (US $) 0.075 அமெரிக்க டொலர் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்திற்குக் கிடைத்ததா என்பதையும்,

(iv) இந்த உடன்படிக்கை காரணமாக, மேற்படி தொகை ஒரு நிமிடத்திற்கு (US $) 0.069 அமெரிக்க டொலர் வரை குறைந்துள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ளுமாறு 2009 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதத்தில் முதல் தடவையாக பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டதா என்பதையும்,

(ii) ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை மேற்படி பிரேரணையை சட்டம் மற்றும் நிதி ரீதியிலான விடயங்களினடிப்படையில் நிராகரித்ததா என்பதையும்,

(iii) ஆமெனின், அந்நிறுவனத்தை மீண்டும் இலங்கைக்கு வரவழைத்தது யார் என்பதையும்,

(iv) மேற்படி உடன்படிக்கை பொது நடைமுறைகளுக்கு முரணாக கையொப்பமிடப்பட்டதா என்பதையும்,

(v) மேற்படி உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டதன் மூலம் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்திற்கு ஏற்படும் நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0848/ '10

9.

கௌரவ விக்டர் அந்தனீ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டடத்திலுள்ள ஒரேயொரு விவசாய பொருளாதார மத்திய நிலையம் கல்பிட்டி பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தின் நொரச்சோலைப் பிரதேசத்தில் அமைந்துள்ளதென்பதையும்,

(ii) கல்பிட்டி பிரதேச சபை ஆளுகைப் பிரதேசம் செழிப்பற்ற நீண்ட மணல் நிலப்பரப்பினால் மூடப்பட்டுள்ளதென்பதையும்,

(iii) மேற்படி பிரதேசத்தின் விவசாயிகள் யூரியா உட்பட இரசாயன பசளைகளை இட்டு செழிப்பாக்கிக் கொள்கின்ற மேற்படி செழிப்பற்ற மணல் நிலப்பரப்பில் இலங்கைக்குத் தேவையான சின்ன வெங்காயம்,மரக்கறி, பழங்களுக்கான தேவையில் சுமார் 1/3 ஐ மிக வெற்றிகரமாக உற்பத்தி செய்கின்றனரென்பதையும்,

(iv) ஆயினும், நெற் செய்கைக்கான யூரியா உட்பட ஏனைய பசளைகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற மானியம் கல்பிட்டியில் மேட்டுநிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு கிடைப்பதில்லையென்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) நெற் செய்கைக்காக வழங்கப்படுகின்ற உர மானியத்தை செழிப்பற்ற நிலத்துடன் போராடுகின்ற மிகப் பின்தங்கிய கல்பிட்டி பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தின் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கும் வழங்குவது பொருத்தமாகுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், மேற்படி உர மானியத்தை கல்பிட்டி விவசாயிகளுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0047/ '10

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) உலக சந்தையில் ஒரு பீப்பாய் எண்ணெயின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010 ஜனவரி முதல் இற்றை வரையிலான காலப்பகுதியில் ஒரு பீப்பாய் எண்ணெயின் விலைத்தளம்பலைடந்த விதத்தையும்,

(ii) இந் நாட்டிற்கு வரும் வெளிநாட்டுக் கப்பல்களுக்கு விற்கப்படும் ஒரு லீற்றர் டீசலின் விற்பனை விலையையும், அதே டீசல் உள்நாட்டு நுகர்வோருக்கு விற்கப்படும் விலையையும்,

(iii) விமானங்களுக்கு விற்கப்படும் எரிபொருளின் விலையையும்,

(iv) உள்நாட்டு மீன்பிடிப் படகுகளுக்கு விற்கப்படும் ஒரு லீற்றர் டீசலின் விற்பனை விலையையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) வெளிநாட்டுக் கப்பல்களுக்கு வழங்கப்படுகின்ற எரிபொருள் சலுகை, உள்நாட்டு மீன்பிடிக்கலன்களுக்கு ஏன் வழங்கப்படுவதில்லை என்பதற்கான காரணத்தை அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0496/ '10

11.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் குழந்தைகளது போஷாக்கு மட்டம் தொடர்பாகவுள்ள தற்போதைய புள்ளி விபரங்கள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி புள்ளி விபரங்களின் பிரகாரம் குழந்தைகளின் போஷாக்கு மட்டம் திருப்திகரமான நிலையில் உள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி குழந்தைகளின் போஷாக்கு மட்டத்தை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

0532/ '10

12.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், அம்பிலாந்துறை - வீரமுனை வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது என்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0048/ '10

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல்கொத்மலை நீர் மின்சக்தி கருத்திட்டம் நிர்மாணப் பணிகள் நிறைவடையும் திகதியையும்,

(ii) இக்கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது மதிப்பிடப்பட்ட செலவுத் தொகை மற்றும் இன்றுள்ளவாறான செலவுத்தொகை ஆகியவற்றை வெவ்வேறாகவும்,

(iii) இக்கருத்திட்டத்திற்கான நிதி எந்த நாட்டிலிருந்து அல்லது எந்த நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பெறும் என்பதையும்,

(iv) கடன் வழங்கும் நிபந்தனைகளையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) பெறுமானத்தேய்வு உள்ளடங்களாக மின் அலகு ஒன்றிற்கான செலவை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0497/ ‘10

14\.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இன்று உள்ள கர்ப்பிணித் தாய்மாரின் போசாக்கு நிலை பற்றி கிடைக்கப்பெற்றுள்ள தற்போதைய புள்ளிவிபரங்கள் யாவை என்பதையும்,

(ii) அத்தரவுகளுக்கு அமைய கர்ப்பிணித் தாய்மாரின் போசாக்கு நிலை திருப்திகரமான மட்டத்தில் உள்ளதா என்பதையும்,

(iii) அந்த கர்ப்பிணித் தாய்மாரின் போசாக்கு மட்டத்தை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0549/ ’10

15\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த இரளிதுலாய் பாலத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளனவா என்பதையும்,

(ii) இன்றேல், அதன் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iii) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இன்றளவில் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்கான நிதியை முதலீடு செய்துள்ள நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) இதற்கு வெளிநாட்டு உதவி கிடைத்திருப்பின், உதவி வழங்கிய நாடு மற்றும் வழங்கிய தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) அந்த நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டனவென்பதையும்,

(iii) நிர்மாணப்பணிகளை ஒப்படைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா வென்பதையும்,

(iv) அவ்வாறாயின், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தம்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

மத்தியஸ்த்த சபைகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0084/ ’10

1.

கௌரவ அஜித் குமார,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தங்கல்லை பிரதேச செயலாளர் பிரிவினுள் அமைந்துள்ள தபால் அலுவல்கள், உப தபால் அலுவல்கள், முகவர் மற்றும் கிராமிய தபால் அலுவல்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) இவற்றில் கடிதங்களை விநியோகிக்கும் அலுவலகங்கள் எவை என்பதையும்,

(iii) மேற்குறிப்பிட்ட அந்தந்த தபால் அலுவலகங்கள் மூலம் சேவை வழங்கப்படும் பிரதேசம், சனத்தொகை மற்றும் கடந்த வருடத்தினுள் வருடாந்தம் உழைத்துள்ள அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட தபால் அலுவலக அதிகாரப் பிரதேசத்துக்குள் வரும் வலயங்களின் எண்ணிக்கை, உரிய தபாற்காரர்கள் மற்றும் தந்தி

ஏவலாளர்களின் எண்ணிக்கை மற்றும் 2009.06.30 ஆம் திகதிக்கு அந்த பதவிகளுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த வெற்றிடங்கள் ஏற்பட்ட திகதிகள் யாவை என்பதையும்,

(iii) இறுதியாக வலயங்கள் மீளமைக்கப்பட்ட திகதி என்னவென்பதையும்,

(iv) மேற்குறித்த பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசத்தில் தபால் வசதிகள் வழங்கப்படாத கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் கிராமங்கள் எவை என்பதையும்,

(v) அவற்றுக்கு தபால் வசதிகள் வழங்கப்படும் கால வரையறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0086/ '10

2.

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தென்மாகாணத்தில் வலயக் கல்விக் காரியாலய மற்றும் கோட்டக்கல்விக் காரியாலய அலுவலர்களைப் பாராட்டும் வைபவமொன்று 2009ஆம் ஆண்டு யூலை மாத இறுதியில் நடாத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அந்த வைபவத்தில் கலந்துகொண்ட அமைச்சர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதையும்,

(ii) அவ்வைபவத்தில் விருதுகளைப் பெற்றுக்கொண்ட வலயக் கல்விக் காரியாலய மற்றும் கோட்டக் கல்விக் காரியாலய அலுவலர்களின் பெயர்களும் பதவிகளும் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0087/ '10

3.

கௌரவ அஜித் குமார,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2003 ஆம் ஆண்டில் தோட்ட முகவர் தபால் அலுவலகங்களை நிர்மாணிக்க செலவு செய்த பணத்தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) அப்பணத்தொகையைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை, நிர்மாணிக்கப்பட்டுள்ள மாவட்டங்கள் மற்றும் தோட்டங்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி தபால் அலுவலகங்களில் தற்போது இயங்கிவரும் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது மூடப்பட்டிருக்கும் தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மூடப்பட்டிருக்கும் தபால் அலுவலகங்களிலிருந்து எதிர்காலத்தில் பெற உத்தேசித்துள்ள பயன்கள் யாவையென்பதையும்,

(iii) அதற்காக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0091/ '10

4.

கௌரவ அஜித் குமார,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "மாத்தறை அபிவிருத்தி நிதியம்" என்ற பெயரிலான நிதியமொன்று கடற்றொழில் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயல்படுத்தப்படாதா என்பதையும்,

(ii) ஆமெனில், அது ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(iii) அந்நிதியம் இயங்கிய காலகட்டத்தில் கடற்றொழில் அமைச்சர் பதவியை வகித்தவர் யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிதியத்துடன் தொடர்புடைய வங்கி மற்றும் வங்கிக் கணக்கு இலக்கங்கள் யாவையென்பதையும்,

(ii) அந்நிதயத்திற்கு நிதி கிடைக்கும் மூலங்கள் யாவையென்பதையும்,

(iii) நிதியத்திற்குக் கிடைத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்,

(iv) அந்நிதியத்தின் பணம் எந்தெந்த பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதையும்,

(v) அப்பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0218/ '10

5.

கௌரவ அஜித் குமார,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின், ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் தற்போது செயற்படுத்தப்படுகின்ற, நீர் வழங்கல் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினாலும் உள்வாங்கப்படும் பிரிவுகள் மற்றும் நீர் தேவையினைப் பூர்த்தி செய்து கொள்ளும், குடும்ப அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) தற்போது, மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினாலும், வழங்கப்படும் நீரினளவு போதுமானதாகவுள்ளதா என்பதையும்,

(iv) கருத்திட்டங்களின் நீரின் கொள்ளளவு போதுமானதாக இல்லாதிருப்பின், அதுகுறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) காலி மாவட்டத்தினுள் பெருமளவு குடிநீர் தேவை இருப்பதாக அடையாளம் காணப்பட்ட புதிய பிரதேசங்கள் யாவையென்பதையும்,

(ii) தற்போது மேற்படி பிரதேசங்களுக்கு நீர் வழங்குவதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) ஆமெனில், அக்கருத்திட்டங்கள் யாவையென்பதையும்,

(iv) ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் நீர் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கும், நீர் மூலங்கள் யாவையென்பதையும்,

(v) இக்கருத்திட்டங்களிலிருந்து குடிநீர் வசதியினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(vi) திட்டமிடப்பட்டுள்ள கருத்திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பான எதிர்கால வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?